262—

கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் நியாயவிலைக் கடை துவங்குதல்

* **34266**—*திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியம், பாலகுறி கிராமத்திற்குப் புதிய கூட்டுறவு நியாய விலைக் கடை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கிடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பதற்கேற்ப இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரேஷன் கடைகளில் அரிசியின் விலையை ஒரு ரூபாய் குறைத்து ஏழைகளின் வயிற்றில் பாலை ஊற்றியிருக்கின்றார்கள். இன்றைக்குப் பாலகுறி கிராமமானது அங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இருக்கிறது; அந்தக் கூட்டுறவு வங்கிதான் 15 நியாய விலைக் கடைக்களுக்கு ஒரு நடுமையமாக இருக்கிறது. அந்த ஊரிலே நியாய விலைக் கடை இல்லாமல் அங்கேயிருக்கின்ற பகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். அங்கேயிருந்து மூன்று கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்திலே இருக்கின்ற அசுரம் என்ற ஊருக்குச் செல்ல வேண்டிய காரணத்தினால் அங்கே ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையையாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலகுறி கிராமத்திற்குப் புதிய கூட்டுறவு நியாயவிலைக் கடை தொடங்கும் திட்டம் உள்ளதா என்று கேட்டதனாலே இல்லை என்று பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது புதிய விவரங்களை இங்கே தருகிறார்கள். வெள்ளராம்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தி வரும் அகரம் என்ற

1995 ஏப்ரல் 7]

நியாய விலைக் கடையில் பாலகுறி கிராம மக்களின் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. அகரம் நியாய விலைக் கடையில் மொத்தம் 734 குடும்ப அட்டைகள் உள்ளன. இது தற்பொழுது எர்றபயனப்பள்ளி என்ற ஊரில் செயல்பட்டு வருகிறது. பாலகுறி கிராமத்திலே 328 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்த விவரங்களிலே இருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபடி-அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு குறிப்பு என்று தெரிகிறது. காரணம், துறையிலேயிருந்து தரப்பட்டிருக்கின்ற குறிப்புகளில் பாலகுறி என்கிற அந்தக் கிராமத்திலேதான் 328 குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்றும், அகரம் கிராமத்தில் 187 அட்டைகள் இருக்கின்றன என்றும், இந்த அங்காடி இருக்கிற கிராமமான எர்றபயனப்பள்ளி கிராமத்திலே 82 அட்டைகள் இருக்கின்றன என்றும், அதற்குப் பிறகு மூன்று கிராமங்களிலே 64, 64, 9 என்று அட்டைகள் இருக்கின்றன என்றும் குறிப்பு தந்திருக்கிறார்கள். இது ஏன் 328 அட்டைகள் இருக்கிற கிராமத்தை விட்டுவிட்டு இந்த 82 அட்டைகள் இருக்கிற பகுதியிலே கடை வைத்து இதிலே இந்தக் கிராமங்களையெல்லாம் இணைத்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, அரசு அதைப்பற்றிப் பரிசீலித்து. இயலுமானால் இந்த பாலகுறி கிராமத்திற்கு இந்தக் கடையை மாற்றி விட்டு, மற்றக் கிராமங்களை இணைத்து ஒரு புதிய கடை-துணைக் கடை அல்லது பகுதி நேரக் கடை என்பது, அது பலனற்ற ஒன்று என்று இப்பொழுது அரசு தெரிந்து கொண்டிருக்கிறது. நான் அன்றைக்கு மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல அந்தப் பகுதி கிராம மக்களே முன்வந்து அதை நடத்த முன்வருவார் களேயானால் அவர்களுக்கு என்று ஒரு தனிக்கடை கூட ஏற்படுத்துவதை பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற கடையை மாற்றினால் புதிய பிரச்சினை வரும். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இருக்கின்ற அந்தக் கடை, அந்தப் பஞ்சாயத்தினுடைய நடுமையமாக இருக்கின்ற எர்றபயனப்பள்ளியிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் அதை முதலிலே அங்கே அமைத்திருக்கின்றார்கள். இப்பொழுது அந்த பாலகுறி கிராமத்திலே அதிகமாக அட்டை இருப்பதால் இந்தப் பாலகுறிக்கு ஒரு பகுதி நேரக் கடையை வழங்குமாறு—ஏன் என்றால் அந்தக் கடையை மாற்றாமல், அந்தக் கடை அங்கேயே இயங்கிக் கொண்டு இருக்கும்போதுதான் அங்கே இருக்கின்ற அகரம், எர்றபயனப்பள்ளி, வெப்பாலம்பட்டி, ஒஸ்தலஹள்ளி, காட்டூர் போன்ற கிராமங்களுக்கு அது மிக அருகாமையிலே இருக்கிறது. ஆகவே, அதை மெயின் கடையாக

அப்படியே விட்டுவிட்டு ஒரு பகுதிநேரக்கடையை மட்டும் இங்கே திறப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி நேரக் கடை என்பதே ஒரு பொருளற்ற ஒன்றாக இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஒரு கடை ஆறு நாட்கள் நடைபெற வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. இதிலே பகுதிநேரக் கடை என்றாலே மூன்று நாட்கள் அங்கே போய்விடுகிறார்கள். மூன்று நாட்கள் தான் இந்தக் கடையே நடைபெறுகிறது. இந்த மூன்று நாட்களும் எப்பொழுது போகிறார்கள் என்பதைச் சொல்ல முடியவில்லை. இந்த மூன்று நாட்கள் அங்கே போகிறபொழுது அன்றைக்கு அவர்களுக்கு மண்ணெண்ணெய் வந்து சேர்ந்ததா என்பதும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, பகுதிநேரக் கடை என்று பெயர் இருக்கிறதே தவிர பல கிராமங்களிலே அங்கே சப்ளை ஒழுங்காக, முறையாக போய் சேருவதில்லை என்று குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற இடத்திலேயிருந்து கடையை மாற்றினால் அங்கே பிரச்சினை வரும் என்று சொன்னார்கள். சில நேரத்திலே பிரச்சினைக்குப் பயந்து கொண்டு நியாயமான உரிமைகளை நாம் விட்டுக் கொடுத்துவிட முடியாது. அதற்காக ஏற்பாடுகள் செய்கிற முறைகளையும் விட்டுவிடக்கூடாது. நான் அந்த இடத்திலேயிருந்து கடையை மாற்ற வேண்டுமென்று சொல்லவில்லை. இங்கே சொல்லப்படுகின்ற 6 கிராமங்களிலே பாலகுறி என்ற கிராமத்திலேதான் 328 அட்டைகள் இருக்கின்றன. இங்கே என்ன விசித்திரம் என்றால் அகரம் என்று இந்தக் கடைக்குப் பெயர் சொல்கிறார்கள். ஆனால், அங்காடி இருக்கும் கிராமத்திற்கு எர்றபயனப்பள்ளி என்று சொல்கிறார்கள். 328 அட்டைகள் கொண்ட பாலகுறியிலும் கடையில்லை. 187 அட்டைகள் கொண்ட அகரம் என்று அழைக்கப்படுகிற இடத்திலேயும் கடையில்லை. 82 அட்டைகள் கொண்ட எர்றபயனப்பள்ளியில்தான் கடையிருக்கிறது. இதற்கு இன்றைக்கு ஒஸ்தலஒறள்ளி, வெப்பாலம்பட்டி, காட்டூர் என்ற 64, 64, 9 அட்டைகள் கொண்ட கிராமங்கள், 6 கிலோமீட்டர், 4 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர் என்று இங்கே சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவ்வளவு தூரம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே சொல்வது அந்தக் கடையை மாற்றச் சொல்லவில்லை. இப்போது நீங்கள் சொல்கிற இந்தக் கிராமங்களுக்கு முறையான ஒரு இடத்திலே இந்த கடை

1995 ஏப்ரல் 7]

அமைக்கப்படவில்லை என்பதை அரசு புரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, 328 அட்டைகள் இருக்கின்ற அந்த இடத்திலேயும் ஒரு கடையை வைக்கலாம். ஆனால் நீங்கள் சொல்கிற பகுதிநேரக் கடையை வைப்பதிலே பயன் இல்லை. அதனால், மக்கள் இன்னும் துன்பத்தைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் போகிற நேரத்தில் மண்ணெண்ணெய் கொண்டு .போகவில்லையானால், அதற்கு பிறகு அந்த ஊருக்கே மண்ணெண்ணெய் போய் சேருவதில்லை. அந்தத் தவறுகள்தான் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன.. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தயவுசெய்து சில பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கம் எவ்வளவு ஒத்துழைக்க முடியுமோ, ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே, இதை இரண்டு கடைகளாக நாங்கள் பிரிப்போம். அதிலே ஒரு கடையை அருள்கூர்ந்து நீங்கள் யாராவது அந்தக் கிராமப் பகுதியிலே இருக்கின்ற படித்த, கொஞ்சம் விவரம் அறிந்த பெண்கள் இருந்தால் பெண்கள், பெண்கள் ஒருவேளை அந்தப் பகுதியிலே கிடைக்கமாட்டார்கள், பிற்பட்டப் பகுதி என்றால், யாராவது ஆண்கள் அந்தக் கிராமத்திலே, பொறுப்பை எடுத்துக் கொண்டு ஒருவரை அடையாளம் காட்டுங்கள். அவர்களை ஏஜென்ஸி என்று நியமித்து இந்தப் பொருள்களையெல்லாம் அவர்களுக்கு வழங்குகிறோம். அதிலிருந்து வருகின்ற அந்த மார்ஜினை கிட்டத்தட்ட 750 ரூபாயிலிருந்து 800 ரூபாய் வரை வரும். அதை அவர்களுடைய ஊதியமாக வைத்துக்கொள்ளலாம். மற்ற செலவுகளையெல்லாம்கூட கூட்டுறவுத் துறையோ, அரசாங்கமோ ஏற்றுக்கொள்கிற முயற்சியிலே ஈடுபடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறவாறு இந்தக் கிராமப்பகுதிகளில் எல்லாம் முறையாக இந்த உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டுமானால் அதை இரண்டு கடைகளாக பிரிப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும். அதற்கு நீங்கள் கொஞ்சம் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 263, திரு. க. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

263—

கோனேரிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

* **35674**—*திரு. க. பழனிசாமி:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிபாரா-